# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2080/17 - 2018 ජූලි මස 16 වැනි සඳුදා - 2018.07.16

2080/17 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.
எனது குறிப்பு இல.: எச்டீஎஸ்/காணி/14/எப்/4

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், ஹம்பாந் தோட்டை மாவட்டத்தில், ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 09 - சிறிபோபுர கிராம அலுவலர் பிரிவில் உள்ள சிறிபோபுர கிராமத்தில் அமைந்துள்ள, இ.தொ. வரைபட இல. 4, பிற்சேர்க்கை இல. 228, தாள் இல. 661 இல் துண்டு இல. ஈ3643 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0054 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித் துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. ஈ3643**

காணியின் பெயர்: சிறிபோபுர கலே; விபரம்: வீதி; ஆரம்ப உரிமை கோருபவர்: ஈகொடஹேவாகே குணவதி, இல. 126, சிறிபோபுர, ஹம்பாந்தோட்டை துண்டு பி2567 மற்றும் பி2568 இன் பகுதி, சிறிபோபுர மேம் பாலம் நிர்மாணிப்பதற்காக தேவைப்படு கின்றது; விஸ்தீரணம்: 0.0054 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை எடுத்துக் கொள்ளப் படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் வருடம் ஓகத்து மாதம் 29 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும், குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் வருடம் ஓகத்து மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ.கே. ஏ. சுனீதா,
பிரதேச செயலாளர்,
ஹம்பாந்தோட்டை.

04.07.2018

08-32

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: பிசெவீ/ காணி/02/எப்1/40

14.12.2017 ஆம் திகதிய 2049/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு விசேட வர்த்தமானி பகுதி III இல் காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் படியான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட எனது குறிப்பு இல. பிசெவீ/ காணி/02/எப்1/40 மற்றும் 20.11.2017 ஆம் திகதிய அறிவித்தல் விசாரணைத் திகதி மற்றும் நேரம், நஷ்டஈட்டு விண்ணப்பத் திகதி என்பன பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

9 விசாரணைகளின் திகதி மற்றும் நேரம்: 17.09.2018 ஆந் திகதி மு.ப. 9.30 மணி

நஷ்டஈட்டு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய திகதி: 10.09.2018 அன்றோ அல்லது முன்போ

குமுது சி.லொகு ஹேவாகம,
பிரதேச செயலாளர்,
வீரகெட்டிய.

பிரதேச செயலகம்,
வீரகெட்டிய.
28 யூன் 2018.

08-33